மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தியாகதுருகத்தில் ஒரு Chilling Centre அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

239—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

***41724—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி இருபாலர் பயிலும் பள்ளியாகும். இப்பள்ளியிலுள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை

2015 செப்டம்பர் 4]

8 ஆகும். 2013-2014 ஆம் கல்வியாண்டில், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலும் இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இக்கட்டடங்களே, இங்கு பயிலும் மாணவர்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைவாய்ந்த எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இராயபுரம், கீழப்பட்டு, நாவல்பூண்டி, களாஞ்சிமேடு, காளாச்சேரி, பூவனூர் போன்ற பல கிராமங்களைச் சேர்ந்த 350-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு நடைபெற்ற 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். கடந்த ஆண்டு, அப்பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 6 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதியை நான் ஒதுக்கியுள்ளேன். இந்நிலையில், அப்பள்ளிக்கு மூன்று வகுப்பறைகளுடன்கூடிய புதிய கட்டடம் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த அரசு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்காண்டு ஆட்சிக் காலத்தில், 650 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதி NABARD திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தேவையான கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, ஆய்வுக் கூடங்கள்

மற்றும் சுற்றுச் சுவர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 முதல் 12 வரையிலுள்ள வகுப்புகளில் 121 மாணவர்களும், 141 மாணவிகளும், ஆக மொத்தம் 262 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு தலைமை ஆசிரியர் ஒருவரும் மற்றும் 17 ஆசிரியர்களும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். ஆகவே, அங்கு இருக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இப்பள்ளியில் 10 வகுப்பறைகள் இருக்கின்ற காரணத்தினால், அதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழபாண்டி உயர்நிலைப் பள்ளி, வடுவூர் மேல்நிலைப் பள்ளி, நீடாமங்கலம் இராம விலாஸ் போன்ற பள்ளிகளுக்குக் கட்டடங்களும், மகாராஜபுரம், தச்சன்வயல், மேலநெம்மேலி, எடமேலையூர் மேற்கு, எடமேலையூர் நடுத் தெரு, ஆதனூர், சீனிக்குடிக்காடு, தென்பாதி, ஆய்குடி செருஉடையார்தெரு, சோனாபேட்டை, மெய்பழத்தோட்டம் ஆகிய கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்காகவும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏற்கெனவே நான் நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ளேன். இராயபுரம், மகாதேவபட்டணம், முன்னாள்கோட்டை போன்ற எங்கள் தொகுதிக்குட்பட்ட பல கிராமங்களிலுள்ள பல பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் நிதி உள்ளதென்று அறிகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கூறிய பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2015 செப்டம்பர் 4]

குறிப்பிட்டிருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளையும் தெரிவு செய்து, அவற்றின் அனைத்துத் தேவைகளையும் ஆய்வு செய்து, மாவட்ட அமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, துறையின்மூலம் ஆய்வு செய்து, அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டட வசதி, சுற்றுச் சுவர் வசதி மற்றும் இதர வசதிகளையும் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

240—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***5411—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு 29 மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 41 செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவம் மற்றும் மருத்துவம்சாரா இதர பணியாளர்களின் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுவருகிற மருத்துவமனையாகும் இது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்டத்